சிவாஜி

"மந்திரிப் பதவி மாசுபடுத்தும்"

பிரதமர் நேரு கூறுகிறார்!

பெங்களூர் மகாத்மியமோ?

வங்காள கவர்னராகக் கல்கத்தாவில் அமர்ந்திருந்த ராஜாஜியை கவர்னர் ஜெனரலாக்கி டில்லிக்கு பாற்றிய சில காலத்துக்குப்பின்னர் அவர் தெற்கே ஒரு சுற்றுப்பிரயாணம் செய்தார். இந்த சுற்றுப்பிரயாணத்தின் போது பெங்களூருக்கும் விஜயம் செய்தார்.

பெங்களூரில் அவர் செய்த ஒரு பிரசங்கத்தில் "நான் கல்கத்தாவிலிருக்கும் வரையில் சந்தோஷமாயிருந்தேன். ஆனால் டில்லிக்கு வந்தபிறகு எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை" என்ற முறையில் பேசினது நேயர்களுக்கு மறந்து போயிருக்கலாம். எப்படியும் ராஜாஜி, தான் ஒரு மாபெரும் அந்தஸ்து படைத்த சிறைக்கைதிபோலும் சமஸ்தான ராஜா போலும் இருப்பதாக அடிக்கடி கூறிவருவது நேயர்களுக்குத் தெரியாததல்ல.

அதே பெங்களூரில் சென்ற சில நாட்களுக்கு முன் பண்டித நேரு ஒரு அரிய பிரசங்கம் நிகழ்த்தினார். அந்த சொற்பொழிவில் ராஜாஜியின் உணர்ச்சிகளையே இவரும் வேறு விதமாக வெளியிட்டிருக்கிறார்.

பண்டித நேரு கூறுகிறார், "மந்திரிப்பதவி அதில் வீற்றிருப்போரை மாசுபடுத்துகிறது. உள்ளத்தை முரடாக்கி விடுகிறது. மந்திரிப்பதவி உருப்படியான வேலை எதையும் செய்யவிடாது" என்று.

சலிப்பும், கசப்பும் அடைந்த உள்ளம் நேர்மைபட இருக்க முயலும் காலத்தில் வெளிப்படும் சொற்கள் இத்தகையவைதான்.

ராஜாஜியும் பெங்களூரில் வந்துதான் இதுமாதிரி சொன்னார், பண்டித நேருவும் பெங்களூர் சேர்ந்து தான் இங்ஙனம் பேசினார், எனவே பெங்களூருக்கு விக்கிரமாதித்தன் சிங்காதனம் போல் ஏதோ ஒரு மகாத்மியம் இருக்கிறது என்று கற்பனை செய்ய வேண்டியதில்லை.

ராஜாஜி, பண்டித நேரு போன்ற பெரிய தலைவர்களுக்கு மக்கள் பணியைத் தம் பணியாக ஏற்றுச்செய்வதே வாழ்வின் ஒரே லட்சியமாக இருக்கிறது. இந்தப்பணியை ஆற்றும் நோக்குடன் அதிகாரபீடங்களில் அமரும்போது அதில் வழிவழியாக சேர்ந்திருக்கும் அழுக்குகளும், வியாதிகளும் அவர்களது கண்களில் படுகின்றன. அவற்றை அகற்றுவதென்றால் அந்தப்பீடங்களையே பொசுக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் புதிய கப்பலை செம்மையுறக் கட்டுவதன் முன், குந்த இடம் தந்த படகை உடைத்து விடுவது புத்திசாலித்தனமல்ல; நன்மை எதும் பயக்காது. இந்த உண்மையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நிர்வாக யந்திரத்தின் மேலேறியிருக்கும் துரு பார்க்கக் கசப்பூட்டுகிறது. அதை அகற்ற அசுர சக்தி தேவையாயிருக்கிறது. இந்தக்கடுமையான தொல்லைகளினின்று சற்று அகன்று வெளிவரும்போது உள்ளத்திலிருக்கும் உணர்ச்சி பிரவகித்து வெளியே வழிந்துவிடுகிறது, சில சமயங்களில்.

பண்டித நேருவின் பெங்களூர் பிரசங்கம் இவ்வாறு தான் வெளிப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கிறோம். நமது பிரதம தேச நாயகர் இவ்வளவு சலிப்புடன், கசப்பான உண்மைகளை வெளியிலெடுத்துச் சொல்வது ராஜதந்திரத்துக்கு உகப்பானதா என்று பலர் எண்ணலாம்.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். பண்டித நேருவுக்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தும் கடமையில் அளப்பரிய ஊக்கமிருக்கிறது. இந்த ஊக்கத்துக்கும், காரிய சாதனை செய்ய வேண்டும் என்ற வேகத்துக்கும் குறுக்கே நிர்வாகச் சூழ்நிலை தடையாக நிற்கிறது. அதைச் சீர்திருத்த வேண்டும் என்ற கவலையினாலேயே பண்டித நேருவும், ராஜாஜியும் இங்ஙனம் பகிரங்கமாகத் தமது கருத்துக்களை சலிப்பு மலிந்த தொனியில் வெளியிடுகிறார்கள்.



இதனுள்

பிரிவும் சிறையும்

பாஞ்சாலி சபதம்

பெங்களூர் மகாத்மியமா?

தமிழ் படத்தில் காதல்

லண்டன் துறைமுகம்

சிறுவர் மலரில் புதுப்புது அம்சங்கள்

2-1-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2



ஐந்தாம் அத்தியாயம்

பிரிவும், சிறையும்

ஹிந்துக்களுக்கு ஒருமுக்கியமான புண்ணிய ஸ்தலமான த்ரிம்பக் என்ற சிறு நகரில் மொகலாயர் படை பிரதம முகாம் சமைத்துத் தன் ஆக்கிரமிப்பை விரிவாக ஊர்ஜிதம் செய்து கொண்டிருந்தது.

த்ரிம்பக் ஷாஹஜியின் நிர்வாகத்தில் இருந்த ஜில்லாவில் முக்கியமானதொரு நகரம். அந்த ஜில்லாவைப் பரிபூரணமாக மொகலாயர் கொடியின் கீழ்க் கொண்டுவரப் பெருமுயற்சி நடந்துகொண்டிருந்தது.

ஷாஹஜியே அந்த பிராந்தியத்தின் முதல்வர் என்றுணர்ந்த முகலாயப் படைத் தலைவன் அவரைச் சிறை பிடிக்க வலை விரித்தான். முகலாய வீரர் பரிகளேறிப் பறந்து சென்று குன்றுகளிலும், குகைகளிலும், காடுகளிலும் எங்கெங்கும் தேடி வந்தனர். ஷாஹஜியின் சுவடே தெரியவில்லை.

கடைசியில் ஷாஹஜி தன் மனைவியையும், பாலகனையும் தனியே விடுத்துத் தெற்கு நோக்கிச் சென்றுவிட்டார் என்ற சேதி கிடைத்தபோது முகலாயப்படைத் தலைவன் ஆழ்ந்து சிந்திக்கலானான்.

தன் பிரதம ராணுவ ஆலோசகனை அழைத்து என்ன செய்வதென்று வினவினான்.

"அவன் மனைவி ஜீஜாபாயைத் தேடிச் சிறை பிடிக்கலாமே" என்றான் ஆலோசகன்.

"அவளைச் சிறைபிடித்து என்ன புண்ணியம்? ஷாஹஜி தான் நம் குறி. அவளைத்தனியே உதறிவிட்டுச் சென்றிக்கும் ஷாஹஜி அவளை மீட்க வருவானென்று நம்புகிறாயா?" என்று கேட்டான் படைத்தலைவன்.

"அரே, அல்லாஹ், நான் அதைச் சொல்லவில்லை. ஜீஜாவுடன் அவள் மகனும் இருக்கிறானே. அவன் நம் கைவசம் கிட்டினால் ஷாஹஜியை நம்மைத் தேடிவர வைத்துவிடலாம்" என்றான் ஆலோசகன்.

"பிள்ளையிடம் மாத்திரம் ஷாஹஜிக்கு என்ன அவ்வளவு அக்கரை இருக்கப்போகிறது!" என்று அவநம்பிக்கையுடன் வினவினான் படைத்தலைவன்.

"அப்படியில்லை. மகன் என்றால் மராத்தியனுக்கு உயிரல்லவா? முதல் மகன் சாம்பாஜியை ஷாஹஜி தன்னுடன் அழைத்துச் சென்றுவிடவில்லையா? மனைவியை விடுத்துச் செல்லும்போது இரண்டாவது மகனும் பிறந்திருந்தால் அவனையும் நிச்சயம் அழைத்துச் சென்றிருப்பான்" என்று விளக்கினான் ஆலோசகன்.

"ஆமாமப்பா. நீ சொல்வதில் உண்மையிருக்கிறது. பத்து வீரர்களை மாறுவேடத்தில் அனுப்பி ஜீஜாபாயைத் தேடச் சொல்லு" என்று உத்திரவிட்டான் முகலாயர் படைத்தலைவன்.

கோதாவரி நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய கருங்குன்று படர்ந்திருக்கும் த்ரிம்பக் நகரில் மொகலாயர் தளமமைத்துத் திட்டமிட்டு, ஜீஜாவையும்அவள் அருமைக்குழந்தையையும் கைப்பற்றத் தேடியலைந்து ஆறு முழு ஆண்டுகளைக் கழித்துவிட்டனர்.

ஃ ஃ ஃ

சிவனேர் கோட்டையின் பாதுகாப்பில் ஜீஜா தன் மைந்தனை அரவணைத்து வளர்த்துவந்தாள். முகலாயரது கொடிய முயற்சிகள்பற்றி அந்தரங்கத் தூதர் பலர் அவளுக்குச் சேதி கொணர்ந்து சேர்த்தனர். கவலையும், குழப்பமும் அவளை வாட்டி வதைத்தன. தன் மகனை எதிரிகள் கையில் சிக்கவிடாமல் காக்கவேண்டும் என்ற ஒரே லட்சியத்துடன் அவள் மனஉறுதி கொண்டு காலம் கடத்தி வந்தாள்.

அமைதியும், சாந்தமும்நின்று நிலவிய சிவனேர் எல்லையில் குன்றுகளின் ஓரத்தில், கோட்டையின் சூழ்புறத்தேபகலிலும், இரவிலும் குளம்போசைகேட்க ஆரம்பித்தது. புதர்களிலும், புற்றரைகளிலும் சல சலப்புக் கேட்க ஆரம்பித்தது. குசு குசுவென்று யாரோ பேசிக்கொள்ளும் சப்தங்கள் காற்றில் மிதந்து வந்தன.

ஜீஜா பதட்டமுற்றாள். சிவனேரில் இன்னும் சிறிது காலமிருந்தால் என்ன நேரிடுமோ என்ற பீதி கவ்விற்று. எங்ஙனம் அவ்விடத்தைவிட்டு நகருவது? எங்கே செல்வது? எங்கு பார்த்தாலும் எதிரிகள் வலை விரித்திருக்கின்றனர். ஜீஜாவுக்கு இரவுகளில் தூக்கம் வருவதேயில்லை சிறு ஒலிகள்கூட அவளைத் துணுக்குறச் செய்து வந்தன.

கோட்டைக்குள் வசித்து வந்த முதுபெரும் கிழவர் ஒருவரைக் கூப்பிட்டு ஆலோசித்தாள் ஜீஜா. சிவாஜியை மாத்திரம் தனியே பத்திரமாக எங்காவது வெளிக் கடத்திவிடுவது நலம் என்றார் அவர். ஜீஜாவுக்கு அருமை மகனைப் பிரியவேண்டுமேயென்ற துயரம் ஒரு புறமிருந்தும் அவன் எதிரிகள் கையில் சிக்காமல் இருக்கவேண்டுமேயென்ற கவலை மறுபுறம் இருந்தது. பெரியவரது யோசனையை ஏற்றுக்கொண்டாள்.

ஒரு நாள் சூரியாஸ்தமனம் கடந்து இரண்டு நாழிகைகளுக்குப்பின் ஜீஜாவின் குடிசை வாயிலில் ஒரு வீரன் வந்து நின்றான். ஜீஜா சிவாஜியை அழைத்துக் கொண்டு குடிசைக்கு வெளியே வந்தாள். அவள் கண்களில் நீர் மல்கி இருந்தது.

"கண்ணே, சிவாஜி" என்று முணு முணுத்தவாறு அவனைப் பன்முறை முத்தமிட்டாள்.

"நேரமாகிறது, தாயே" என்றான் அருகிருந்த வீரன்.

"இவன் என் அருமைக் குழந்தை மாத்திரமல்ல. அவதார புருஷன். நாட்டை உய்விக்க வந்தவீரன். இவனைப் பாதுகாப்பதில் உயிரைக்கூட மதியாது அக்கரை காட்டவேண்டும்" என்றாள் ஜீஜா வீரனிடம்.

"எனக்கு ஒன்றும் சொல்லவேண்டியதில்லை, தாயே. இந்தக் குன்றுகளும், மலைகளும், புதர்களும் படர்ந்துள்ள வரையில் சக்தியின்மேல் ஆணையாக இவனைக் காப்பேன்" என்று உணர்ச்சியும், உறுதியும் மிக்க குரலில் வாக்களித்தான் வீரன்.

இருளின் கனம் சிவனேரை அழுத்திவிட்டது. அந்த இருளினூடே ஒரு மராத்திய வீரனும், நாட்டை உய்விக்கப்பிறந்த தனித் தலைவனாகப்போகும் இளைஞனும் கோட்டையைவிடுத்துப் புதர்களிடையே மறைந்து நடந்தனர்.

ஃ ஃ ஃ

மறுநாள் விடியற்காலையில் மூன்று குதிரைகள் சிவனேர் கோட்டைக்குள் புகுந்து ஜீஜாவின் குடிசை வாயிலில் வந்து நின்றன. அவற்றின்மேலிருந்து மூன்று முகலாய வீரர் வாளுருவி இறங்கினர். அவர்களைத் தொடர்ந்துவந்த ஒரு பல்லக்கும் அருகே இறங்கிற்று.

அரவம் கேட்டு ஜீஜாவெளியே வந்தாள். "நீங்கள்தானே ஜீஜாபாய்?" என்று கேட்டனர் அம்மூவரும்.

"ஆமாம்" என்றாள் அவள். அவளுக்கு விஷயம் தெளிவாகப் புரிந்துபோய்விட்டது.

"உங்கள் மைந்தனெங்கே?" என்று கேட்டான் அம்மூவரில் முதல்வன். ஜீஜா மௌனமாயிருந்தாள். நான்கைந்து தடவைகள் இதேகேள்வி இடப்பட்டபோதும் அவள்பதிலிறுக்கவில்லை.

மொகலாய வீரர் அவளை மேலும் கேட்பதை நிறுத்திவிட்டனர். அவளைத் துன்புறுத்தவில்லை. பாதுகாப்பாகசிறைபிடித்துச் செல்லவே பல்லக்குடன் அம்மூவரையும் அனுப்பி வைத்திருந்தான் த்ரிம்பக்கில் அமர்ந்திருந்த படைத்தலைவன்.

குடிசையைச் சூழ்ந்து தேடினர். கோட்டையை சல்லடை போட்டுச் சலித்தனர். மைந்தன் சிக்கவில்லை. தாயை மாத்திரம் பல்லக்கிலேற்றி த்ரிம்பக் நகரை நோக்கி அழைத்துச் சென்றனர். ஜீஜாபாய் மௌனமாக அவர்களுடன் சென்றாள்.

(தொடரும்)

REGD. INSIST ON Original Wheel Mark Diamonds REGD.
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை 14 | திருச்சி, 2—1—49 சர்வதாரி-ளு மார்கழி-மீ, 19-உ | முற்றுகை 5

மந்திரி பதவி

விஞ்ஞானிகள் மந்திரிகளாவதில்லை என்பதற்காக நான் வருந்தவில்லை. மந்திரிப் பதவி மனத்தை மாசு படுத்துகிறது. உள்ளத்தை அசங்கியமாக்கி விடுகிறது. உருப்படியான வேலை ஏதும் செய்வதை இந்தப் பதவி குந்தகப் படுத்தி விடுகிறது.

—பெங்களூரில் பண்டித நேரு

மனசசாட்சி

சட்டத்தால் விலக்கிக் கட்டுப்படுத்த முடியாத சில ஒழுக்கங்கள் இருக்கின்றன. சில பேர்களுக்குக் கடவுளின் பெயரால் ஒரு காரியத்தை செய்வதாக வாக்களிப்பது தங்கள் விசுவாசத்தைத் தெரிவிக்கும் முறையாக இருக்கும். தங்கள் மனச்சாட்சியே சிலருக்குப் போதுமானதாக இருக்கும். வெளியிலிருந்து இவர்களுக்குக் காவல் தேவையில்லை.

—டாக்டர் அம்பேத்கார்.

இசை வளர்த்து அருள் வளர்க்கும் பண்பு

புற ஒழுங்கும் அக அமைதியும்

இசை வளர்த்து அருள் வளர்க்க முடியும் என்று சீன மேதை கான்பூஷியஸ் நம்பினர். இசையின் மூலமே பண்டைய மனித குலம் தன் கருத்துகளைத் தெரிவித்தது என்று சாத்திரம் கண்ட நல்லறிஞர் கூறுவர். கரத்தைக் கைலாயத்தடியில் கொடுத்துவிட்டுத் தவித்த ராவணன் கைலாஸநாதனை இசையிலாழ்த்தி விடுதலை பெற்றதாகக் கதைகள் கூறும். கோவிந்தன் குழல் கொடு ஊதினபோது சூழ்புறத்தே நேர்ந்த விந்தைகளை ஆழ்வார் விரிவுபடப் பாடிக் கரைந்திருக்கிறார்.

தியாகராஜர் நாதப் பிரம்மத்தில் லயித்துப் பின்னவருக்குப் பெரும் பொக்கிஷம் போன்ற கீர்த்தனங்கள் விடுத்துச் சென்றிருக்கிறார்.

முன்னவர் உணர்ந்து, அனுபவித்துப் போற்றி வளர்த்த நம் நாட்டின் இசைக் கலையை நாமும் போற்றி வருகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக சென்ற சில நாட்களில் சென்னை நகரில் நடைபெற்ற இசை விழாக்கள் விளங்குகின்றன.

சென்னை சங்கீத அகாடமியின் 22-வது இசை மகாநாடு சென்னை மாகாண கவர்னர் பவநகர் மகாராஜாவினுல் திறந்து வைக்கப்பட்டு, பிடில் வித்வான் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் தலைமையில் நடந்திருக்கிறது.

சென்னை பைன் ஆர்ட்ஸ் சொஸைடியின் சார்பில் 16-வது இசை மகாநாடு நீதிபதி ஏ. எஸ். பி. அய்யரவர்களால் திறந்து வைக்கப்பட்டு, போராசிரியர் ஆர். சீனிவாசய்யரவர்களது தலைமையில் நடந்திருக்கிறது.

செயிண்ட் மேரி மண்டபத்தில் பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரவர்களால் திறக்கப்பட்டுத் தமிழிசை மகாநாடு இனிது நடந்தேறியிருக்கிறது.

இந்த மூன்று மகாநாடுகளிலும் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் இசைத் துறையில் நம்மவருக்கு இன்றுவரை சேர்ந்துள்ள பண்புகளும், இனி நாம் காண வேண்டிய முன்னேற்றமும் பற்றிய விஷயங்களை விளக்கமாக எடுத்துக் காட்டுகின்றன.

ஃ ஃ ஃ

தமிழிசை விழாவையொட்டி நடைபெற்ற பாரதியார் பாட்டுப் போட்டி குறிப்பிடத்தக்க சிறந்த அம்சமாகும். இப்போட்டியில் வெற்றி பெற்ற ஸ்ரீமதி வேதவல்லிக்கு கவர்னர் ஜெனரல் ராஜாஜியவர்களது உபயமான இனிய தம்புரா பரிசளிக்கப்பட்டது.

பிரதமர் ஓமந்தூரார் இசையின் அடிப்படை உண்மைகளை எடுத்துக்காட்டி அனைவரும் இதய பூர்வமாக ரஸிக்கத்தக்க சங்கீதமே உயர்ந்தது என்பதை விளக்கமாக வற்புறுத்தியிருக்கிறார். ஆர். கே. ஷண்முகமவர்கள் தமது சொற்பொழிவில் நம் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் தனித்தன்மையுடன் பல்வேறு கலைப் பண்புகள் வளர்ந்து வருவதைக் குறிப்பிட்டு, இந்தியாவின் கலையொருமையைச் சிகரம் போற்கொண்ட இந்தப் பல்வேறு கலைத் தூண்களின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டினர். தமிழிசையும், தமிழ்க் கலைப்பண்புகளும் தனித் தன்மை கொண்டு இயங்கி வளர வேண்டியதன் அவசியத்தை எடுத்து விளக்கினர்.

சங்கீத அகாடமியில் ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் கர்நாடக சங்கீதத்தின் சம்பிரதாய முறைகளை எங்ஙனம் வழுவாமல் காக்க வேண்டுமென்று கூறி, நவீன கால இசைக் கலைஞரிடையே தோன்றியுள்ள குறைகளை எடுத்துக் காட்டினர். பவநகர் மகாராஜா ஹிந்துஸ்தானி இசை முறைக்கும், கர்நாடக சங்கீதத்துக்கும் இருந்துள்ள உறவுகளைப்பற்றிக் கூறி இந்த உறவினுல் இரு துறைகளுக்கும் ஏற்பட்டுள்ள நலன் பற்றிக் குறிப்பிட்டார்.

நம் நாட்டின் கலையும், கல்வியும் மனித குலத்தின் தீராத

கப்பல்களைச் சார்ந்திருக்கும் உயிர் காப்புப் படகுகளில் சிறந்த வகை நவீன விஞ்ஞான அமைப்புடன் மிதந்து வருகிறது.

சென்னை இசை விழாக்கள்

ஆன்ம வேட்கையையே உயிராகக் கொண்டு உருப்பெற்று வளர்ந்திருப்பதை பைன் ஆர்ட்ஸ் சொஸைடியில் ஏ. எஸ். பி அய்யரவர்கள் அழகுறக் கூறினர்.

எந்தக் கலையும் அகத்தின் அமைதியினின்று மலருவது. இந்த அக அமைதிக்குப் புற ஒழுங்கும், நிம்மதியும் இன்றியமையாத தேவைகள்.

இன்று உலகம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்து வாழ்க்கையைச் சரிவரச் சமைத்துக் கொள்ளத் தெரியாமல், போரிலும், சூதிலும், செருக்கிலும், ஆக்கிரமிப்பிலும் அழுந்திக் கிடக்கிறது. பண்டைய காலத்தில் இத்தகைய சிக்கலான வாழ்க்கைப் பிரச்னைகள் குழப்பாததன் காரணமாகக் கலைத் துறையில்-அக வாழ்வில் — ஒளி காணும் ஊக்கம் அதிகமாக இருந்தது. அதற்குரிய வசதிகளுமிருந்தன.

உடலை வளர்த்து, உயிர் வளர்த்து, இவற்றின் மூலம் மனித குலத்துக்கே ஒன்றான தத்துவ வேட்கையை வளர்க்க நாம் வசதி கண்டுவிட்டால் கலைகள் வளர்ந்து செழிக்கும். இசையின் பாங்கில் இனியதோர் தேர் அமைத்து உயிர்ப் பொருளின் மேற்கொண்ட யாத்திரையை ஊக்குவிக்க வழி ஏற்படும்

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்

பார்த்தவர்கள் திரும்பத்திரும்ப பார்க்கிறார்கள்!
நீங்கள்மட்டும் ஏன்?

3-1-49 முதல் 10-வது வாரமாக நடைபெறும்

ஜுபிடர் மோகினி தமிழ் படம்

V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை, லலிதா, பத்மினி நடித்தது

தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு

அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

கூட்டுறவு சாதனை

“ஒருவர் ஒரு தொழிலில்
இரண்டுநாள் ஒத்திருந்த
சரிதம் அரிது நம்
தாய்நாட்டில்...........”

என்று புதுயுகக் கவிஞர் பாரதிதாஸன் இரக்கப்படுகிறார் இந்த நாட்டு மக்களின் வாணிபத் தொழில் துறைகளில் நிலவி வரும் ஒற்றுமையின்மையைக் கண்டு.

கூட்டுறவு முறையில் பலபேர் சேர்ந்து சிறு துளியாகப் பெரும் மூலதனம் சேர்த்து பண்டகசாலைகள், தொழிற்சாலைகள், விவசாயம் போன்ற தொழில்களை நடத்துவது ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

விலைவாசிகள், உற்பத்தி, விநியோகம் ஆகியவை காலநிலைக்கு ஏற்பவும் சர்வதேசச் சூழ்நிலைகளாலும் மாறுபடும்போது தனிப்பட்ட எவரும் பாதிக்கப்படாமல் இருக்கவும், தனி எவரும் கொள்ளை லாபம் சேர்த்துக் கொழுக்காமல் இருக்கவும் கூட்டுறவுமுறை மிகச்சிறந்ததென்று பொருளாதார தத்துவம் கூறுகிறது.

ஆனால் இன்று நம் நாட்டில் நடைபெறும் லிமிடெட் கம்பெனிகளும், சில கூட்டாளிகளின் பொது நிர்வாகத்திலும் உடமையிலும் இயங்கும் ஸ்தாபனங்களும் இந்தத் தத்துவத்தை மெய்ப்பிப்பதாக இல்லை.

இத்தகைய ஸ்தாபனங்களில் நிர்வாகத்திலிருப்போர்— சிறிய பங்குதாரர்களுக்கு ஏதோ கொஞ்சம் லாபத்தையோ— பெரிய நஷ்டத்தையோ கணக்குக் காட்டிவிட்டு இலாபம் முழுவதையும் ஏப்பமிட்டுவிடும் புலிகளாகவே பெரும்பாலும் காணப்படுகிறார்கள். ஒரு கம்பெனியை ஆரம்பிக்கும்போதே நிர்வாக ஊதியமென்று திட்டமான மாதாந்திர வருமானமும் வருடவாரி லாபத்தில் கமிஷன் பெரும் பகுதியும் இப்படி ஒரு சிலர் தங்கள் சொந்தப் பணப்பையை வீங்கச்செய்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது கண்கூடு.

இந்த நிலை வளர்ந்து வருவதன் காரணமாக, மிகச் சிறந்து விளங்கவேண்டிய கூட்டுத் தொழில் முறை இன்று நம் நாட்டில் சூதுவாதுகள் நிறைந்ததாக மாறிவிட்டிருக்கிறது!

திறமை மட்டும் படைத்த தொழிலாளிக்கு போதிய முதலும், முதல் படைத்த பணக்காரனுக்கு ஏற்ற தொழிலும் தொழில் தேர்ச்சிபெற்ற நிர்வாகியும் கிடைப்பதில்லை. தொழில் திறமை பயனற்றுக் கிடக்கிறது. முதலும் துருப்பிடித்துக் கிடக்கிறது. இரண்டையும் ஒன்றாக இணைத்து அனைவரும் வெற்றி காணக்கூடிய தொழில்முறை கூட்டுத் தொழில்தான்.

இந்த உண்மையையும் நாட்டு நிலையையும் அறிந்த நாயுடு, மோட்டார் போக்குவரத்துத் துறையில், கோவை ஜில்லாவில் சிதறிக்கிடந்த பல கம்பெனிகளை ஒன்றாக்கிப் பெரிய ஸ்தாபனமாகச் செய்து தானே அவற்றின் நிர்வாகப் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடத்திக் காட்டியதுடன் கூட்டுறவு முறையின் மேன்மையை உணரும்படி செய்தார். பின்னால் அவர் அடைந்த சில கசப்பான அனுபவங்களால் -போலீஸ்-வருமானவரி இலாகாக்களின் தொல்லையினால்— அவர் இந்தப் பொறுப்புக்களிலிருந்து தன்னை மீட்டுக்கொண்டுவிட்டபோதிலும் அவர் காட்டிய கூட்டுறவுத் தொழில் நேர்மை இன்னும் அனைவராலும் போற்றப்படுவதற்குரிய தாயிலங்குகிறது.

1920-ம் ஆண்டில் ஒற்றை பஸ்ஸுடன் புதுத்துறையில் ஊன்றிய சிந்தையும் ஓங்கிய உழைப்பும் ஈடுபடுத்திய நாயுடு அத்துடன் மோட்டார் சம்பந்தமான நுண்ணிய பாகங்களைப் பழுதுபார்த்தல, திருத்தியமைத்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்கென்ற கலைக்கூடம் ஒன்றையும் ரூ. 4000/-ம் மூலதனத்தில் ஆரமபித்து வாடகை இடத்தில் வைத்து நடத்தி அதிலும் தேர்ச்சி பெற்றதுண்டு. ஒரு மோட்டார் போக்குவரத்து வெற்றிகரமாக நடைபெறுவதற்கான வழிதுறைகளை அனுபவ பூர்வமாக உணர இது அவருக்கு இடமளித்தது.

கிடைக்கும் வருமானத்தையெல்லாம் முதலீடாக்கிக் கொண்டு மேலும் மேலும் உழைத்ததன் விளைவாக ஆண்டுதோறும் உயர்வடைந்துவந்தார். ஒருவர் ஒரு தொழிலில் வெற்றியடைந்தால் மற்றவரும் அதே துறையில் இறங்கிப் போட்டியிட ஆரம்பிபபதேயன்றி புது முயற்சிகளில் இறங்குவது நம்மவர் வழக்கம் இலலையல்லவா? கீரைக்கடைக்கும் எதிர்க்கடை ஒன்று போடாவிட்டால் தூக்கம் வராது சிலருக்கு. இத்தகையோர் நாயுடுவின் மோட்டார் தொழில் வெற்றியைக் கண்டு வாளாவிருத்தல் இயலுமா? பல மோட்டார் போக்குவரத்துக் கம்பெனிகள் உடனே தோன்றிப் போட்டியிடலாயின. நாயுடு தேனீபோல் உழைத்து சிறு மூலதனம் படைத்துத் தொழில் புரிந்திருக்க, ஏனையோர் துருப் பிடித்துக் கிடந்த செல்வத்தைத் தொகை தொகையாய்க் கொண்டுவந்து கொட்டி எதிர்க்கடை போட்டார்கள். போட்டியை அஞ்சாது கர்மயோகத்தில் நிலை நின்றார் நாயுடு.

நாயுடுவின் உழைப்பும் குறிக்கோளும் திறமையான மோட்

(அடுத்த பக்கம் பார்க்க)

மின்சார ‘மூளை’ சதுரங்கம் ஆடும்

பிரிட்டிஷ் ஆஸ்பத்திரியொன்றில் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கபபட்ட ஒரு மின்சார ‘மூளை’ மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டால் சதுரங்கம் ஆடவும் அதற்குக் கற்றுக்கொடுக்க முடியுமாம்.

“ஹோமியாஸ்டாட்” எனப்படும் இந்த மூளைக்கு பல மின்சார சர்க்யூட்டுகள் பிணைக்கப் பட்டிருக்கின்றன. இந்த மூளையை கண்டுபிடித்த டாக்டர் வில்லியம் ராஸ்-ஆஷ்பி இதை இன்னம் பெரிதாக தயாரித்தால் இதற்கு சதுரங்கம் ஆடக்கற்றுக் கொடுக்கலாம் என அபிப்பிராயப்படுகிறார். இந்த இயந்திரத்தை தயாரிப்பதற்கு 17 வருடங்கள் பிடித்தது.

1839ம் வருடத்திலிருந்து இன்னமும் முதல்தரமாக பிரக்யாதி பெற்று விளங்குகிறது!

உலக பிரசித்திபெற்ற
அசல்
ஷண்முகம் பட்டணம் பொடி
உலக மார்க்கை கவனித்து வாங்கவும்
எங்கும் கிடைக்கும்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 140. மதறாஸ்.

சுதந்திர இந்தியாவில் தேசிய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரிகளுக்கு சப்ளை செய்யப்படும்.

பாபு இண்டஸ்ட்ரீஸ்
டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

பெங்களூர் காஞ்சிவரம் பட்டு சேலைகள் பனாஸ் ஜரிகை புட்டா தார்பாரு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

SLATE MANUFACTURERS & FANCY PIECE GOODS & SILK CLOTH MERCHANTS

கூட்டுறவு சாதனை

(முன் பக்கத் தொடர்ச்சி)

டார் போக்குவரத்து நடத்துவதும், இயன்றவரை வசதிகளைக் கூட்டிப் பிரயாணத்தை இனிமையாகவும் செலவு சிக்கனமானதுமாக்குவதும் ஆகிய கலைப்பயனையாகும். ஆனால் ஏனையோர் இந்தத்துறையில் கிடைக்கும் லாபத்தைமட்டுமே கவனத்தில் இருத்தியிருப்போர். எனவே பொதுமக்களின் நம்பிக்கை அன்பு, மதிப்பு, ஆதரவு இவை நாயுடுவின் செல்வங்களாயின. "யுனைடெட் மோட்டார் சர்விஸ்" என்ற பெயருடன் தன் ஸ்தாபனத்தை நிலை நிறுத்த இந்தச் செல்வமே அடிப்படையாக இருந்திருக்கிறது. விரைவில் தன் தொழிற்சாலையை வாடகையிடத்திலிருந்து விஸ்தாரமான சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றி வைத்துக்கொள்ளவும் வசதி ஏற்பட்டது. இன்று தினம் கோவை நகரத்தின் நடுப் பகுதியில் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்களுக்கு மேல் மதிப்பிடக் கூடிய யந்திர வசதிகளுடன் கூடிய நாகரீகமான தொழிற்சாலையாக இலங்குகிறது யு. எம். எஸ். தொழிற்சாலை.

போட்டியைத் தவிர்த்து அனைவரையும் வலுவான ஒரே ஸ்தாபனமாக்கிப் பயனடையச் செய்வதுடன் போக்குவரத்துக்கு மோட்டார் பஸ்களை வைத்து நடத்துவதை உன்னதமான கலையாகப் புரிய வேண்டுமென்ற அவருடைய இடைவிடாத முயற்சி பலனளிக்காமல் போகவில்லை.

போட்டியிட்டவர் பலர் பெரு நஷ்டத்துக்காளாகிச் சோர்ந்த காலங்களிலெல்லாம் அவர்களை அணுகித் தன்னுடன் சேரும்படி கேட்டுக்கொள்ளத் தவறியதில்லை நாயுடு. இப்படிப் பனிரண்டு கம்பெனிகளாகச் சிதறிக் கிடந்தவர்களை 1930-ல் ஒரே கூட்டாக இணைத்து அவர்கள் அனைவரின் விருப்பப்படி முழு நிர்வாகப் பொறுப்பையும் நாயுடு அவர்களே ஏற்றுக் கொண்டார். இப்போது கோவையிலிருந்து பல்வேறு திசைகளிலும் புறப்பட்டுச் சென்று திரும்பும் 200 பஸ்கள் ஒரு யூனியனாக இணைந்தன. நாளொன்று 500 தடவைகள் போக்குவரத்தில் சுமார் 15000 பிரயாணிகள் 1500 மைல் மொத்த நடமாட்டத்திற்கு வசதி பெற்றனர். கோவை, நீலகிரி, மலபார், மதுரை, கொச்சி ஆகிய பிரதேசங்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் போக்குவரத்து வசதிகளைப் பெற்றன. சுமார் 1000 பேர் வேலைசெய்து மாதந்தோறும் 17 ஆயிரம் ரூபாய் வரை ஊதியம் பெறுவது சாத்யமாயிற்று 10 லட்சரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கம் பல வகை வரிகளின் மூலம் பெறும் தொகை ஆண்டுதோறும் 5 லட்சங்களுக்குமேல்.

பல்லடம் என்னும் இடத்தில் மிகப் பெரிய பஸ் ஷங்ஜன்—சந்திப்பு—இந்தியாவில் எங்கும் காணாத அற்புதமான அமைப்பு. அதைக்கட்டுவதற்கு ஒரு லக்ஷத்திற்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது. பிரயாணிகள் தங்கவும், உணவுகொள்ளவும், பிரயாணச் சீட்டு வாங்கவும், வண்டிகள் வந்து நிற்கவும், பழுது பார்த்துப் புறப்படவும் மிகச் சிறந்த ஏற்பாடுகள் உண்டு. புத்தகசாலைகள். கடைகண்ணிகள் யாவும் உண்டு. தொலைதூரத்திலிருக்கும் இருப்புப் பாதையுடன் போக்குவரத்து இணைப்பு ஏற்பாடுகளும் இருப்பதனால் பிரயாணிகள் எங்கே செல்லவும் பிரயாணச் சீட்டுபெற வசதியிருக்கிறது. சொந்த மின்சார உற்பத்தி விநியோகமும் இருக்கிறது. சென்னை அரசாங்கக் காரியதரிசியாக இருந்த ஜி. டி. போக்துரை இந்த ஷங்ஜனை திறந்துவைத்தார்.

விருந்தில் கூட்டம் அதிகமாகத் தானிருக்க வேண்டும்! ஆனால் பாண்டத்திலே இரண்டொரு சிமிட்டா தேயிலையே காண்கின்றது, ஆகவே டீ நீர் பெருகியதாயும் ருசியற்றதாகவுமே இருக்கும். நல்ல டீ தயாரிக்க நபர் ஒன்றுக்கு ஒரு முழு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் தேயிலை உபயோகிக்க வேண்டும்.

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சிபெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம் நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச் செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில்பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ் விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்

1. புதியதாக எடுத்ததும் புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில வேண்டாம்.

"தேயிலைப் பானம் - சில யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

நன்கு தயாரிக்க



டீ யைப் போன்றது வேறெதுவுமல்ல.

'இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.'

IK.297.TM



லிப்டன்ஸ்

என்றால் முதல்தரமான டீ

LK-127 GTM

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 2—1—49

ஆண்டு புதிதாகுது

1948-ம் ஆண்டு முடிந்து 1949-ம் ஆண்டுபிறந்திருக்கிறது. காலவேகம் கடுமையாகத்தான் இருக்கிறது. ஆண்டுகளும், நூற்றாண்டுகளும், சகாப்தங்களும், யுகங்களும் தம் சிறகுகளைக் குவித்துக் காத்திருப்பதில்லை. பறந்த வண்ணமாகத்தான் இருக்கின்றன.

காலத்தைக் கணக்கிட ஆரம்பித்த மனிதப்பண்பு தன் சாதனைகளை அவ்வப்போது புள்ளியெடுத்துப் புரிந்து கொள்வதையே லட்சியமாகக்கொண்டிருக்கிறது.

காலத்திற்கு முடிவில்லை, ஆனால் கணக்குண்டு. எல்லையில்லை. ஆனால் இடைக்கல்லுண்டு. சிந்தனைக்கு அற்புதமாகத்தான் இருக்கிறது. கணக்கிட முடியாததைக் கணக்கெடுத்துப்பார்ப்பதில் நமக்குத்தான் என்ன ஆனந்தம்!

சரித்திரம் சகாப்தங்களையும், நூற்றாண்டுகளையும் ஒரே மூச்சில் முகர்ந்து தன் ஏடுகளில் பதிவு செய்கிறது. இந்த நூற்றாண்டின் பண்பாடு இது, இந்த சகாப்தத்தின் ஏக்கம் இது என்று முடிவுகட்டிப் பொதுப்படையான கோட்பாடுகள் வகுக்கப் பார்க்கிறது.

காலம் வளர்கிறது. மனித இயக்கத்தின் பலனாக விளையும் சம்பவங்கள் எண்ணிக்கையில் வளர்கின்றன. இவற்றிற்குக் குறிப்பிட்ட லட்சியம் இருக்கிறதா? லட்சியத்துடன் மனித வர்க்கம் தெளிவான தொடர்பு கொண்டிருக்கிறதா? இவை வேதாந்தம் ஆராயும் விஷயங்கள்.

வானமண்டலத்தில் புதிய வால்நட்சத்திரங்களும், கிரஹங்களும் தோன்றுவதைவிஞ்ஞானி பதிவு செய்கிறான், கல்லில் புத்தொளிகண்ட விந்தையைக் கலைஞன் வார்த்துக் கூறுகிறான். இலக்கியத்தின் ஏக்கத்தில் புதியதொரு பிரச்சனை எழுந்திருப்பதை ஆசிரியன் கூறுகிறான். காலத்தின் நெடியபாதையில்விஞ்ஞானியும், கலைஞனும், ஆசிரியனும் கம்பங்கள் நாட்டுகின்றனர்.

இத்தகைய பல்துறைச் சாதனைகளிலும் ஒரே லட்சியம் ஊடுருவி நிற்கிறதா, இவற்றின் சுழையில் முன்னேற்றத்தைக் காட்டக்கூடிய ஒற்றுமை புலப்படுகிறதா என்ற கேள்வியே காலத்தைக் கணக்கெடுக்கும் மனிதகுலப்பண்பு மறவாதிருக்க வேண்டிய கேள்வி.

1948-ம் ஆண்டு கடந்தது. உலகம் அதில் என்ன சாதித்தது? நம் நாடு என்ன செய்தது? மனித குலம் ஒருமைப்பட்டு இயங்குவதாக சென்ற ஆண்டின் சுவட்டில் ஏதாவது பதிவு இருக்கிறதா?

காணோம். எங்கெங்கும் குழப்பமும், இருளுமாகத்தான் இருக்கிறது. வீரமற்ற போராட்டங்களும், முன்னேற்றத்தில் கவலையற்ற ஆட்சிகளுமே சென்ற ஆண்டின்—ஏன், சென்ற பல ஆண்டுகளின்—சுவட்டில் பதிந்திருக்கின்றன. மனித குலத்தின் ஒருமையை உணர்ந்த இயக்கம் எங்கும் காணக்கிடைக்கவில்லை. மகாத்மாவின் மறைவு உலகுக்கு இப்பேருண்மையை நினைவுறுத்தும் திறல் படைத்த ஒரு மாபெரும் சக்தியை விழ்த்திவிட்டது.

1949-ம் ஆண்டுக்குள் புகுந்திருக்கிறோம்—நம்பிக்கையுடன்தான். உலகம் தன்னை மேம்படச்செய்துகொள்ள வேண்டுமேயென்ற கவலையுடன்தான். நம்பிக்கையும், கவலையும் மாத்திரம் போதாது. செயல்வேண்டும். ஆக்கத்திறன்வேண்டும்.

முக்கியமாக நம் நாட்டின் முன் பல பெரிய பிரச்னைகள் குவிந்து நிற்கின்றன. ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளோர் எச்சரிக்கையுடன் ஆள்வதும், மக்கள் அதன்சங்கடங்களையுணர்ந்துஒத்துழைப்பதும் மிகவும் அவசியம்.

அறிஞர் ராதாகிருஷ்ணன் கூறியிருப்பதுபோல "சாதாரண மனிதன் சுதந்திரத்தின் இனிமையை இன்னும் ருசிக்கவில்லை. தான் இன்னும் ஆக்கிரமிப்பின் கீழ் அழுந்திக் கிடப்பதாகவே எண்ணிவருகிறான். இந்த உணர்வு இருக்கும்வரை நாம் சுதந்திரம் பெற்றுவிட்டதாகக்கூறமுடியாது. அதிகாரம் நமக்குப் போதையூட்டி, நமது உறுதி நிலையை அசைத்து ஆட்டிவிட்டது."

குழப்பங்களும், வகுப்புவாத உணர்ச்சியும், லஞ்ச ஊழலும், நேர்மையின்மையும், பகட்டும், படாடோபமும் ஒழியவேண்டும். நிதான புத்தியும், ஒற்றுமையுணர்ச்சியும், நேர்மையும், தன்னடக்கமும் வளரவேண்டும். இந்தப்பாதையில் ஒரு சில அடிகளாவது நாம் முன்னேறியிருப்பதாக 1949-ம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்போகும் கணக்கு பதிவு செய்யவேண்டும். செய்யுமா? பார்ப்போம்.

சிறு குறிப்புகள்

ஹிடெகி டோஜோ:-

உலகம் முன்னேறிவிட்டது, கலாசாரம் சீர்பெற்றுச் சிங்கார நன்னிலை யெய்தி விட்டது, சட்டமும் திட்டமும் சுதந்திரமும், அறிவும் ரொம்ப ரொம்ப வளர்ந்து ஓங்கி விட்டன என்று மார் தட்டிக் கொள்ளுகின்றனர். முக்கியமாக தற்கால நீதி முறையின் சிறப்பை எடுத்துக்காட்டப் பண்டைய கொடுமைகளை ரத்தத்தில் எழுதிக் காட்டி நம்மை ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்கின்றனர்.

குற்றம் சாட்டுபவன், குற்றவிசாரணை செய்வோன் தண்டனையை நிறைவேற்றி வைப்பவன் என்று மூன்று ரகமாகப் பிரித்து நீதி நிர்வாகத்தைக் கொண்டு செலுத்தும் பண்பு இருபதாம் நூற்றாண்டின் இணையிலாச்செல்வம் என்று கதறுகின்றனர்.

ஆனால் இப்படி முன்னேறிப் போய்விட்ட இந்த யுகத்தில் தான் ஜெனரல் ஹிடெகிடோஜோவும் இன்னும் பல ஜப்பானியரும் ஒரு சாரரால் குற்றம் சாட்டப்பட்டு, அவர்களாலேயே விசாரணை செய்யப்பட்டு, அவர் தம் திருக்கரத்தாலேயே தூக்கிலும் போடப்பட்டிருக்கிறார்கள்.

டோஜோவின் குற்றமென்ன?

யுத்தம் நடந்த காலத்தில் ஜப்பானியப் பிரதமராயிருந்தார். வேறொன்றுமில்லை. துரதிருஷ்டவசமாக நேசதேசங்களுக்கு எதிர்க்கட்சியில் போரிட்ட தேசத்தின் பிரதமராயிருந்தார்.

ஜப்பான் ஜெர்மனியின் கட்சியில் சேர்ந்துகொண்டு கொன்று குவித்தது. நேசதேசங்களுடன் சேர்ந்துகொண்டு இதே காரியத்தைச் செய்திருந்தால் அதற்காக டோஜோவுக்குப் பூமாலை, பாமாலை எல்லாம் கிடைத்திருக்கும்.

காட்டுமிராண்டித்தனமான பண்பாடுகளை ரொம்பவும் முன்னேற்றமடைந்த கலாசாரமாக மதிக்கும் நம்மவர் புத்திச் சிறப்புதான் என்னே!

பிரிட்டனில் மரண தண்டனையையே எடுத்துவிட வேண்டும் என்றும், 'உயிரின் புனிதத் தன்மையை' தாம் உணர்ந்துவிட்டதாகவும் பசப்பும் கோஷ்டியார் தான் ஜப்பானில் டோஜோவைத் தூக்கிலிடுகிறார்கள். இது தான் பண்பாடு, கலாசாரம், நீதி!

இந்திய நீதிபதி பால் அவர்களது அறவுரையை உணர்ந்து ஏற்றுக்கொள்ள அதிகாரவெறி, கொலை செய்வதில் இருக்கும் மிருக உணர்ச்சி, மறுத்துவிட்டது. ஆனாலும் உலகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது!!

அக்பர் ஹைதாரி

அஸ்ஸாம் கவர்னராயிருந்த ஸர் அக்பர் ஹைதரி அவர்கள் சில நாட்களுக்கு முன் மறைந்தார். மாகாணத் தலைநகரை விடுத்து நிர்வாக சம்மந்தமான யாத்திரையில் இருந்த காலத்தில் எதிர்பாராத முறையில் அவரது மரணம் நேர்ந்தது.

ஹைதரி பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் திறமையுடன் நிர்வாகவேலையில் பல துறைகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றி அனுபவம் பெற்றவர். அவரது மனைவி சிக்ரிட் வெஸ்ட்லிஸ் என்ற ஸ்விடன் தேசத்துப் பெண்மணி.

ஸர் அக்பர் ஹைதரி பழைய சகாப்தத்தினின்று எஞ்சி வந்தவரேயானாலும் அவரது பரந்த மனப்பான்மையும், திறமையும் புதுயுகத்துக்கு அவரைப் பொருத்தமாக்கியிருந்தன.

நொக்ராஷி பாஷா:

எகிப்தியப் பிரதமர் நொக்ராஷிபாஷா "முஸ்லிம் சகோரத்வ" வகுப்பைச் சார்ந்த ஒரு இளைஞனால் கொல்லப்பட்டசேதி அரபு நாடுகளில் பெரும் கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. நொக்ராஷி பாஷா கல்வித்துறையில் எகிப்து தேசத்துக்கு அரும் தொண்டாற்றியவர். சாதாரண உபாத்யாயராயிருந்துஇந்தஉயர் நிலைக்கு வந்தவர். வப்து கட்சியின் பிரதி நிதியாக இரண்டு மந்திரிசபைகளில் பதவி வகித்தவர். பின்னர் வப்து கட்சியினின்று விலக்கப்பட்டு சாடிஸ்ட் கட்சித்தலைவரானார். 1936-ல் ஆங்கிலோ—எகிப்திய உடன்படிக்கைப் பேச்சுவார்த்தைகளை நடத்தியவர் இவரே. 1945-ல் பிரதமராயிருந்த அஹமத் மஹேர் பாஷாவும் கொலை செய்யப்பட்டே இறந்தார். நொக்ராஷியும் இந்த முறையிலேயே கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறார்.

குழந்தை நட்சத்திரம்

லண்டன் பிலிம் ப்ரொடக்ஷன்ஸ் தயாரித்த 'வீழ்ந்த விக்கிரகம்' (The Fallen Idol) என்ற படத்தில் தனது சிறந்த இயற்கையான நடிப்பினால் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்த பாப் ஹென்றி என்ற 8-வயது சிறுவனை பிரபல டைரக்டரான சர் அலெக்சாண்டர் கார்டா 30,000 பவுனுக்கு (ரூ. 3,99000) ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

தெரியுமா...?

நன்றாக வளர்ந்த ஜிராபியின் உயரம் 18 அடி.

பிரிட்டிஷ் நாணயம் 'பிளோரின்' (Florin) 100 வருஷங்கள் பழமையானது. முதன் முதலில் இந்நாணயம் 1848-ல் அச்சடிக்கப்பட்டது.

மனிதனுடைய ரோமம் சாதாரணமாக ஒரு மாதத்தில் ஒரு அங்குலத்தில் எட்டில் மூன்று பாகம்வீதம் வளர்கிறது.

3,000 வித விதமான பிராணிகளுக்கு கிரீன்லாந்து வாசஸ்தலமாக இருக்கிறது.

உயிரற்றுப் பிறந்து உயிர் பெறும் விந்தை

தாலாட்டின் தனி மாண்பு

அமைதியற்ற அல்லது அழும் குழந்தைகளை தூளி அல்லது தொட்டிலிலிட்டோ அல்லது புஜங்களில் அணைத்துக் கொண்டோ ஆட்டுவதன் மூலம் விரைவில் தூங்கச்செய்யலாமென்பது தாய்மார்களுக்கும் மருத்துவப் பெண்களுக்கும் நர்ஸுகளுக்கும் பொதுவாக சகலருக்கும் தெரிந்த விஷயமேயாகும். இதே முறையைக் கையாண்டு அநேகமாக செத்துப் பிறக்கும் குழந்தைகளை உயிர் பெறச்செய்ய முடியுமென டாக்டர் இ. ஸி. ஈவ் என்பவர் "பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல்" என்ற வைத்திய சஞ்சிகையில் விவரமாக எழுதியுள்ளார்.

தாலாட்டும் முறையை உபயோகித்து செயற்கையாக சுவாசம் ஏற்படச் செய்யலாமென்பதைப் பற்றி டாக்டர் ஈவ் அவர்கள் 1932 ஆண்டிலேயே ஒரு கட்டுரை எழுதியிருந்தார். கடந்த வருடம் மரணமடைந்த டாக்டர் என். ஸி. போர்ஸித் என்பவர் "வெள்ளை மூச்சடைப்புடன்" கஷ்டப்பட்டுக் கொண்டே பிறக்கும் குழந்தைகளுக்கு உயிரளிப்பதில் 'தாலாட்டும் முறையை' வெற்றிகரமாகவே கையாண்டிருக்கிறார்.

முகத்தில் நீலம் பாய்வதுதான் மூச்சடைத்து விட்டதென்பதற்கு ஒரு சாதாரண அறிகுறியாகும். எனினும் சில குறிப்பிட்ட "கேஸ்"களில்—உதாரணமாக மின்சாரம் உடலில் பாய்ந்த அல்லது நீரில் மூழ்கிய நபர்களினும் நாபிக்கொடி நசுக்கப்பட்டு பிறக்கும் குழந்தைகளிலும்—இம்மூச்சடைப்பு ஒருவித வெளிறின முகத்தோற்றத்திலிருந்து உணரப்படுகிறது. இதற்குத்தான வைத்திய சாஸ்திரத்தில் ஆங்கிலத்தில் "வெள்ளை மூச்சடைப்பு" என பெயரிடப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கிய நபரொருவரை சக்கரத்தின்மீது வைத்தோ அல்லது கைகளைப் பிடித்தோ சற்றும்பொழுது அந்த நபரின் கன்னங்களுக்கு மீண்டும் இளஞ்சிவப்பு நிறம் திரும்புவதை டாக்டர் ஈவ் தன் ஆராய்ச்சிகளின் போது கவனித்தார். இளஞ்சிவப்பு நிறம் திரும்பக்காரணமென்ன என்ற யோசனையில் ஆழ்ந்தார். இந்நடவடிக்கை போதிய பிராணவாயுவுள்ள இரத்த ஓட்டத்தை செயற்கையாக சிருஷ்டிப்பதுடன் அதை நீடித்தும் நிற்கச்செய்கிறதென்ற முடிவுக்கு வந்தார்.

டாக்டர் ஈவ் அவர்களின் புதிய ஆராய்ச்சிகள் டாக்டர் போர்ஸித் ஆராய்ச்சிகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. டாக்டர் போர்ஸித் தனது ஆராய்ச்சிகளின் போது அநேகமாக செத்துப்பிறந்த 11 "கேஸ்"களிலும் தாலாட்டு முறையைக் கையாண்டு கன்னங்களில் இளஞ்சிவப்பு நிறம் திரும்புவதைக்கண்டார். சுவாசம் ஆரம்பமாவதற்கு முன்னர் தான் குழந்தைகளின் கன்னங்களில் நிறமாற்றம் ஏற்பட்டது. அக்குழந்தைகளை அவர் ஆட்டியது சுவாச நரம்பு 'செல்'களுக்கு இரத்த ஓட்டத்தை மீண்டும் ஏற்படுத்தியது. இதன் காரணமாக சுவாச தசைகள் வேலை செய்யஆரம்பித்தவுடன் வாயுவை சுவாசிக்கவும் துடிதுடித்தன.

குழந்தை பிறக்கும்பொழுது அதன் சுவாசப்பைகள் விரிவடைந்திருப்பதில்லை. ஆகவே செயற்கையாக இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும் பொழுது நரம்பு 'செல்'கள் போதுமான பிராணவாயுவை விரிவடையாத இளம் சுவாசப்பைகளுக்கு சப்ளை செய்ய முடிகிறது. இவ்விதம் போதிய பிராண வாயு இல்லாமல் சுவாசப்பைகள் விரிவடையாமல் இருந்து விடுவதும் கரியமிலவாயுமட்டும் அதிகம் ஒன்று திரண்டு விடுவதும் தான் பிறக்கும் குழந்தைகள் உடனடியாக இறந்து போவதற்கு முக்கிய காரணம்.

இக்காரணத்திற்காகத் தான் சுவாசப்பைகளை வேலை செய்யும்படி தூண்டுவது வைத்தியரின் முதல் இலட்சியமாக இருக்கிறது. நரம்பு செல்களுக்கு இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்தி சுவாசம் ஏற்படும்படி செய்வதே முதலில் மிக மிக அத்யாவசியமானதென்பதை டாக்டர் ஈவ் அவர்களின் முறை சந்தேகத்திற்கு சிறிதும் இடமின்றி நன்கு நிரூபித்துள்ளது. குழந்தையை ஆட்டும் பொழுது இரத்த ஓட்டம் அதிகரிக்கிறதென்பதுதான் டாக்டர் ஈவ் ஆராய்ச்சியின் அடிப்படையான தத்துவமாகும்.

ஆகவே அநேகமாக செத்துப் பிறக்கும் குழந்தையை டாக்டர் ஈவ் அவர்களின் முறைப்படி ஆட்டும் பொழுது அதுவரை அசையாமல் தேங்கி நின்ற குழந்தையின் மூளையிலுள்ள இரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. இதன் விளைவாக ஹிருதயத்திலுள்ள கதவுகள் வேலை செய்கின்றன. உடனே ஹிருதயம் சுவாசப்பைகளை வேலை செய்யும்படி தூண்டுகிறது உடனும் சுவாசிக்க ஆரம்பிக்கிறது.

குழந்தை பிறந்தவுடன் அதைக்கைகளில் வைத்துக் கொண்டு ஆட்டுவது தீங்கு விளைவிக்குமோவென எவரும் பயப்படவேண்டாம். அதற்குமாறாக குழந்தையை அப்படியே அமைதியாக விட்டுவிடுவதுதான் ஆபத்தாகும். ஏனெனில் குழந்தை சாஸ்வதமாகவே தூங்கிவிடும்!!

குழந்தைகளை சுவாசிக்கச் செய்வதென்பது எப்பொழுதுமே ஒரு இலகுவான காரியமல்ல. டாக்டர் போர்ஸித் சிகித்சை செய்த முதல் குழந்தைக்கு முதலாவது சுவாசம் ஏற்படுவதற்கு 35நிமிடம் ஆட்டவேண்டியிருந்தது. இதுபற்றிய பூரா விவரங்களும் அச் சஞ்சிகையில் நன்கு விவரித்துள்ளார்.

டாக்டர் ஈவ், போர்ஸித் ஆகியவர்களின் ஆராய்ச்சிகளான செயற்கை சுவாசம் ஏற்படச்செய்வதற்கான இம்முறை எங்கும் அதிக ஆர்வத்தை எழுப்பியுள்ளது.

தாம்பூலத்திற்கு
மைதீன்
புகையிலை
மேலானது
E. S. MYDEEN & Co.
இஸ். மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

திருச்சி சப் கோர்டு

O. P. 134/48

பால குருமூர்த்தி செட்டியார்.
— மனுதார்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,

திருச்சி கோட்டை கள்ளத்தெருவில் இறந்துபோன ஜெயலெக்ஷ்மியம்மாளுக்கு வரவேண்டிய நிலுவைகளை வசூல்செய்ய ஷை யார் புருஷனான மனுதார் தனக்கு பாத்திய சர்டிபிகேட்டு கிடைக்க பிராது கொடுத்து 6—1—49-ல் வாய்தா வைக்கப்பட்டிருப்பதால் ஆட்சேபனையுள்ளவர்கள் தெரிவித்துக்கொள்ளலாம்.

(Sd.)
M. S. KRISHNASWAMY IYER
Pleader

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, ChinaBazaar Rd., MADRAS.

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் இடையாது முப்புவினால் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி
சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

திருச்சி டி. முன்சீப்கோர்ட்

O. S. 318/1948

சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா பொம்மல பாளையத்திலிருக்கும் ராமசாமி அய்யர் குமாரர் B. R. சுந்தரமய்யர்.
— வாதி

2 3. பிரதிவாதிகள்—பெங்களூர் Cavalry Road. 17 ‌நெ வீட்டிலிருக்கும் கிருஷ்ணசாமி அய்யர் குமாரர் Clerk, Military Department K. ஜானகிராமய்யர் 2. ஷை யூர் ஷையார் தம்பி Clerk, Imperial Bank of India, Bangalore K. சந்தானராமன். 3 இவர்களுக்கு என் கக்ஷிக்காரருக்கு ஈட்டுக கடன் பத்திரப்படி வரவேண்டிய ரூ. 2700 க்கும் பின் வட்டி தாவா சிலவுக்கும் என் கக்ஷிக்காரர் தாவா செய்து 8—1—49 தேதி வாய்திக்குப் போட்டிருக்கிறபடியால் ஷை தேதி பகல் 10-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகி உங்களுக்குள்ள ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளாவிட்டால் உங்கள் பேரில் எக்ஸ்ப்பார்ட்டி ஏற்படும் நின்பதை கண்டிப்பாய் அறியவும்.

V. K. Vaidyanatha Iyer.
திருச்சி 25-12-48

TRADE MARK
GVR
குவாலிடி காப்பி
திருச்சி.

சிவாஜி சந்தா விபரம்

வருட சந்தா	ரூ.	7—0—0
ஆறு மாதம்	ரூ.	3—8—0

கண்ணுக்குக் குளிர்ச்சியான இந்த இடம் லண்டனில் ட்ரபால்கர் சதுக்கம் என்று பெயர் பெற்றுள்ளது

லண்டன் துறைமுகம்

அன்றொருநாள் வெளிநாட்டிலிருந்து என் விலாசத்திற்கு ஒரு பெட்டி வந்து அது "லண்டன் துறைமுகத்தின்" கிடங்குகளொன்றில் வைத்திருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே நான் பெட்டியின் சாவியுடன் சுங்க அதிகாரிகள் பரிசோதனைக்கு பெட்டியிலுள்ள பொருள்களை காண்பிக்க வேண்டுமாதலால்— துறைமுகத்திற்கு போகவேண்டியதாயிற்று.

என் பெட்டி டில்பரி டாக் என்ற இடத்திலுள்ள கிடங்கில் இருந்தது. டில்பரி டாக் தேம்ஸ் நதியின் கரை ஓரத்தில் லண்டனிலிருந்து 20 மைல் தூரத்திலிருந்த போதிலும் லண்டன் துறைமுகத்தின் ஒரு பாகமேயாகும். நான் லண்டன் நகரத்தின் மத்தியிலிருக்கும் பிஞ்சுசர்ச் ஸ்டேஷனில் ரயிலேறி டில்பரிக்குச் சென்றேன்.

அங்கு எல்லாவிதமான உருவங்களிலும் பெரிதும் சிறிதுமான நூற்றுக்கணக்கான பாரந்தூக்கிகளை கண்டேன்; சிக்கலான பல தெருக்களும் சந்துக்களும் ரயில்பாதைகளும் அங்கு காணப்பட்டன. பல ராக்ஷஸ கப்பல்களை பார்த்துக்கொண்டே ஒரு பிரமாண்டமான கிடங்கினருகில் வந்து சேர்ந்தேன். ஒரு சிறிய பட்டினத்தையே அந்த கிடங்கில் வைத்து மூடிவிடலாம் போல் எனக்குத் தோன்றிற்று. ஆகவே அது எவ்வளவு பெரிய கிடங்கு என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். அந்த பெரும் கிடங்கின் ஒரு மூலையில் தான் என் பெட்டி மிக பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது.

70-மைல் நீளம்

லண்டன் துறைமுகத்தைச் சேர்ந்த டில்பரி டாக் மிகவும் விஸ்தாரமானது. இதைப்போல் பல டாக்குகள் இருக்கின்றன லண்டன் துறை முகத்தின் நீளம் 70-மைல், நிலப்பரப்பு 3,000 ஏக்கர்கள், ஜலப்பரப்பு 700 ஏக்கர்கள், இங்கு கப்பல் நிற்பதற்காக அநேக மடுக்களும் இருக்கின்றன. ஜலப்பரப்பையும் நிலப்பரப்பையும் அநேக கால்வாய்கள் ஒன்று சேர்க்கின்றன. பிரம்மாண்டமான கப்பல்கள் தங்குவதற்கு மட்டும் 44 மைல் நீளம் ஜலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இத்துறை முகத்தை ஒரு தனி நகரமென்றே கூறவேண்டும். பிரிட்டனின் கடற்படைக்கும் உலக வர்த்தகத்திற்கும் லண்டன் துறைமுகம் ஒரு கேந்திர ஸ்தானமாகும்.

கடந்த வருடத்தில் மட்டும் 37 370 கப்பல்கள் இத்துறைமுகத்துக்குள் வந்து வெளியேறியிருக்கின்றன. இக்கப்பல்களின் மொத்த நிறை 39,000,000 டன்களுக்கு மதிகமாகும். 1947-ல் இத்துறைமுகத்தின் வழியாகச் சென்ற பொருள்கள் யுத்தத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் 75 சத விதம் அதிகரித்திருக்கிறது ஏற்றுமதிகள் யுத்தத்திற்கு முன்பிருந்ததைக்காட்டிலும் $1\frac{1}{2}$ மடங்கு பெருகியிருக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி மூலமாக 40,000,000 டன்களுக்கு மதிகமான வர்த்தக சரக்குகள் லண்டன் துறைமுகத்தில் கையாளப்படுகிறது.

உலக வர்த்தகத்தின் கேந்திர ஸ்தானமான இத்துறைமுகத்தில் தற்காலிகமாக குவிந்துள்ள நானாவிதமான பொருள்களை கணக்கிடுவது எளிதல்ல. லண்டன் துறைமுகத்தின் எல்லாப் பகுதிகளையும் விரிவாக பார்ப்பதற்கு பல வாரங்கள் பிடிக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு தனிப்பட்ட வேலையைச் செய்கிறது. ஆனால் பிரிட்டனின் வெளிநாட்டு வர்த்தகத்தை நாம் அறிவதற்கு எல்லாவற்றையும் மேலடியாகத் தெரிந்து கொண்டால் போதுமானது

இத்துறை முகத்தின் 'ரமணியகரமான' கிடங்குகள் லண்டன் செயிண்ட் காதரீன் டாக்குகளில் தான் இருக்கின்றன. இவ்விடம் வாசனைத் திரவியங்களின் நறுமணம் நமது மூக்கைத் துளைக்கும். தந்த சாமான்களும் மது வகையறுக்களும் இங்குதான் வைக்கப்படுகின்றன. வெளி நாடுகளிலிருந்து வரும் அதிசயப்பண்டங்களையும் இங்கு காணலாம். கம்பளித் துணிகளை இறக்குவதற்கு ஒரு பிரத்யேக கிடங்கு இருக்கிறது. மற்ற டாக்குகளில் தானியங்கள், பழங்கள், புகையிலை முதலியவைகளுக்கு கிடங்குகள் இருக்கின்றன. வெட்டு மரங்களை வைப்பதற்கு தனி கொட்டகைகளும் உள்ளன.

துறைமுக நிர்வாகம்

லண்டன் துறைமுகம் அதன் பெரும் பொறுப்பை மிக ஒழுங்காகச் செய்யும் ஒரு அழகான இடம். இத்துறைமுகத்துக்கு பார்லிமெண்ட் சட்டமொன்றின்படி ஒரு 'தனி அரசாங்கம்' இருக்கிறது. இதுதான் 'லண்டன் துறைமுக அதிகாரம்' என அழைக்கப்படுகிறது. இதன் நிர்வாகம் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி துறையில் வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அதிகாரம் 28 அங்கத்தினர்களடங்கிய ஒரு போர்டினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதில் 18 நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 10 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இப்போர்டில், கப்பல் சொந்தக்காரர்கள், வியாபாரிகள், கிடங்கு நிர்வாகிகள், துறைமுகத்தொழிலாளர்கள், ஸ்தல அதிகாரிகள் முதலிய எல்லா சாரார்களின் பிரதிநிதிகளும் ஸ்தானம் வகிக்கின்றனர்.

லண்டன் துறைமுகத்தின் நிதி நிர்வாகம் கூட இப்போர்டு வசம்தான் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. துறைமுகத்தைச் சேர்ந்த மூலதனம் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய்களாகும். துறைமுகச்செலவு போக அதிகப்படியாக சேரும் பணம் எல்லாம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதிலும் துறைமுகத்தில் பொது ஜனங்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதிலும் செலவிடப்படுகிறது.

பிரிட்டிஷ் வர்த்தகத்துக்கு லண்டனின் முக்கியத்துவத்தை ஆங்கில அரசரான மகா ஆல்பிரட் (848—900) அக்காலத்திலேயே உணர்ந்திருந்தார். அவர் கப்பல் கட்டுவதற்கும் கடல் வர்த்தகத்திற்கும் நிரம்ப உதவி செய்தார். இருந்தபோதிலும் எலிசெபத் அரசி காலத்தில் தான் பிரிட்டனின் வர்த்தகம் உலகெங்கும் வியாபிக்க ஆரம்பித்தது. இன்று பிரிட்டிஷ் வர்த்தகம் உச்ச நிலையை அடைந்திருக்கிறதென்றால் லண்டன் துறைமுகத்திற்கும் அதில் ஒரு முக்கிய பங்குண்டு.

—நிகோலஸ் வெண்ட்

வருந்துகிறோம்

தஞ்சையில் நமது 'சிவாஜி'யின் விநியோகஸ்தராயிருந்தவரும், நாடகத் துறையின் மூலம் தேசத் தொண்டாற்றியவரும், தஞ்சை நகர காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அங்கத்திராக இருந்தவருமான ஜி. பக்கிரிசாமி அவர்கள் சமீபத்தில் காலமான சேதி கேட்டு வருந்துகிறோம். அன்னாரது பிரிவால் வருந்தும் அனைவருக்கும் எம் அனுதாபங்கள்.

தமிழ்ப் படத்தில் காதல்

"வாசுகி"

நமது தமிழ்ப் படங்களில் தலைசிறந்து விளங்குவது காதல் கட்டம்தான். மற்ற பாவங்களைவிட காதலை அணு அணுவாக அலசி ஆராய்ந்து அப்பட்டமாக விளக்குவதில தமிழ்ப்பட பிர்மாக்களை மிஞ்ச தற்போதைக்கு யாருமிலலை என்று சொல்லிவிடலாம். காதல் செய்யாது போனால் அது தமிழ்ப்படமாகவும் கருதப்படாது.

காதலில் எத்தனை ரகம் வேண்டும். அடேயப்பா, கண்டதும் காதல், காணுமலே காதல், கட்டியணையும் காதல், குளக்கரையில் காதல், கோயிலில் காதல் என்று இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த ரகங்களில் ஏதாவது ஒரு ரகத்தை அடிப்படையாகக்கொண்டுதான் கதையே பின்னபபடும்.

ஒரு இளம் மங்கை ஒய்யார நடை நடந்து நதிக்கரைக்கு வருவாள். அங்கு ஒரு ஆணழகன் ஆடிப்பாடி நிற்பான். அவ்வளவு தான். மஙகை ஒருகணம் பார்ப்பாள். மறுகணம ஒரு வெட்டு, ஒரு தளுக்கு, ஒரு மினுக்கு, ஒரு முறுவலை முறுக்கிவிட்டு நாலு தடவை திரும்பிப் பார்த்து விட்டுப் போவாள். அதன் பலன்? மறுநாள் மலர்ப் பொழிலில் இருவரும் ஆனந்தமாக கட்டிப் புரண்டு 'காமபோதி' ஆலாபனத்தில் தங்கள் காதலை அண்டா அண்டாவாகக் கொட்டி அளந்து கொண்டிருப்பார்கள். இன்னொரு ரகக் காதல் கோயிலில் ஆரம்பமாகும். கடவுளைக் காண வந்த இரு உருவங்கள் ஒன்றை ஒன்று பார்த்து விழுங்கிக்கொள்ளும். உடனே காதல் உதயம் தான்.

இப்படி நினைக்க முடியாத கற்பனைக்கு எட்டாத வகைகளில் காதல் உதயமாகி படாத பாடு படுத்திவிடும்— (நம்மைத்தான்!)

இது வெளிப்புறக் காதல். உட்புறக்காதல் இன்னும் விசேஷம். விரகதாபத்தால் வெந்து சாகும் காதலிகளின் சேஷ்டைகளை அனுபவித்து ரசிக்கும்படி உருட்டிக்கொடுத்துவிடுவார்கள். அந்தத் தலையணைகளுக்கு மட்டும் உயிர் இருந்தால் அது இந்தக் காதலிகளை பழிக்குப் பழி வாங்கியே தீரும். காதலிகள் தங்கள் விரகதாபத்தைத் தலையணை மூலம்தான் வெளிப்படுத்த வேண்டும் என்பது டைரக்டரின் கட்டளையாக இருக்கும்போது நடிகை, பாவம், என்ன செய்வாள்!

முதல் சந்திப்பிலேயே ராக ஆலாபனம் செய்து தங்கள் உணர்ச்சிகளைக் கொட்டிக்கொள்ளும் காதலர்களும் இருக்கிறார்கள். படுக்கையறை மர்மங்களை விஸ்தாரமாக விவரித்துக் காட்டத் தகுந்தபடி டைரக்ட் செய்யும் புண்யவான்களும் உண்டு.

ஒருவள் வாசலில் பாடிக்கொண்டுவரும் ஒரு பிச்சைக்காரனுக்கு அரிசிபோட வருவாள். அவளைக்கண்ட மறுநிமிஷம் இருவரிடையேயும் காதல் உதயமாகிவிடும். இப்படி இதைவிட மட்டரகச் சூழல்கள் (ஹாஸ்யம் என்ற பெயரால் அடிக்கும் கூத்து) சித்தரிக்கப் படுகின்றன.

ஒரு பெண் அவ்வளவு சீக்கிரத்தில் சர்வசாதாரணமாகக் கண்ட கண்ட ஆடவன்மேல் காதல்கொண்டுவிடுவது என்று வந்தால் பிறகு உலகில் ஆண்கள் பாடு ஆபத்துதான். பெண்ணின் மதிப்பென்ன? காதலின் தன்மை என்ன? ஐயோ படத்தில் காதல் கட்டங்களைக் காணும் ஜனங்களின் மனதில் புனிதமான எண்ணங்கள் நிலவவேண்டாமா? ரசிக்கும்படியாக அமையவேண்டாமா?

காதலர்களின் செய்கைகளை லேசாக கலையழகுடன் தெரிவிக்க வேண்டுமேயன்றி தூக்குவதும் கட்டிலில் போடுவதும் முத்தமிடுவதுமான படுக்கையறைக் காட்சிகளை காண்பிக்கக் கூடாது. ஆடையணிகளுடன் அலங்காரமாக நிற்கும் ஒரு அழகான பெண்ணைக் கண்டு ரசிக்கலாம். ஆனால் அதே பெண்ணை நிர்வாணமாக்கி நிற்கவைத்தால் நம் கண்கள் அவளைக் காணக் கூசும். அதுபோலத்தான் காதல் காட்சிகளை கலையழகுடன் வெளிப்படுத்தினல் அதைப் பார்ப்பவர் அதைப்பற்றிய எண்ணத்தில் மூழ்கி சிந்தனையில் இறங்கிவிடுவர். அந்தக் காட்சிகள் அவர்கள் மனதைவிட்டு அகலாதவாறு பதிந்துவிடும். பதியும்படி செய்வது தான் திறமை. ரசிகனின் சிந்தனைக்கு இடமின்றி நிர்வாணமான பெண்ணைப் பார்த்து உடல் கூச கண்களை மூடிக்கொள்ளும் நிலைக்குத் தான் இன்று தமிழ்ப்படத்தில் காதல் சித்தரிக்கப்படுகிறது.

அடுத்தபடி காதலர்களின் பொருத்தத்தைப் பார்ப்போம். காதலன் இருபதுவயதுக் கட்டழகனுக இருப்பான். காதலி 50 வயதுப்பாவையாக ஓடிய ஓடிய (சாம்பார் அண்டாபோல) நிற்பாள். இந்த அணங்கைக்கண்டு எந்த மடையனுவது காதல் கொள்ள முடியுமா? காதலனை உருட்டிவிட்ட சாராயப் பீப்பாயாக, யானைநடைபோடுபவனுக வைத்து ஒரு புதுமுகத்தை— 16-வயது நங்கை, எதிலும்புதிது —காதலியாக அஞ்சாமல் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு வசனமோ அப்பப்பா... வசனகர்த்தா இப்படிப்பட்ட ஜோடிகளைக் கற்பனை செய்திருந்தால் இவ்வளவு அழகான வசனம் அவரது கற்பனையில உதயமாகி இருக்கவே இருக்காது.

அசடுவழியும் அழுமூஞ்சியைப்பார்த்து ஒருவன கட்டுக்கடங்காத காதல்கொண்டு தவிப்பான். அவளைப் பார்த்தால் சன்யாசம் வாங்கிக்கொண்டுவிடலாம் என்ற நிலையில் இருக்கும்.

இதை எல்லாம்விட பிரமாதம் ஹாஸ்ய ஜோடிகளிடையே காட்டப்படும் காதல் வகைகள் தான். எத்தனை விதம் அடாடா, அவன் பல்லிளித்துப் பெண்ணிடம் வெண்சாமர பூஜை வாங்குவதிலிருந்து அவன் கண்ணுலத்தை (அந்தந்தப்பட டைரக்டர்களின் ரசனைக்குத் தக்கவாறு) சித்தரிக்கும் அழகுகளைப்பற்றி இங்கே சொல்ல இடமில்லை. ஆனல் ஒன்று. ஹாஸ்ய ஜோடிகள் 60 வயதுப் பழுத்த பழமாகப்போனுலும் அவர்கள் இளம் தம்பதிகள் (16 வயது 20 வயது ஜோடிகள் போல) சேஷ்டைகள் செய்து விளையாடி மகிழலாம். அவர்களின் முகங்களில் கிழட்டுத்தனம் வழிந்து அருவருப்பைக் கொடுத்தாலும் அவர்கள் தமிழ்ப் படக்கர்த்தாக்களின் கண்களில் இளமை சொட்டும் ஜோடிகளாகத்தான் தோன்றுவார்கள். ஹாஸ்ய ஜோடிகளுக்கு வயது கணக்கில்லை. அது அவர்கள் உரிமை!

தமிழ்ப்படங்களிலும் ஒருசில இந்த ஆபாசக் காதல் களியாட்டங்களிலிருந்து தப்பி வருகின்றன. ஆனல் அவை வெகு வெகு சில தான்.

ஜெமினி மாலினி காதலும் கண்ருவியும் இல்லாமல் பிரமாத வெற்றியடையவில்லையா? காதல் என்ற வாசனையே தலைகாட்டவில்லையே மாலினியில். அதனல் அதை ஜனங்கள் ரசித்து மகிழவில்லையா?

இப்போது வெளிவந்துள்ள சக்ரதாரியை எடுத்துக்கொள்ளுங்கள். பெண்ணின உணர்ச்சிகளை விரசமில்லாமல் எவ்வளவு அழகாகச் சித்தரித்து இருக்கிறார்கள். சாந்து தன முதல் இரவில் கணவன் வரவு பார்த்து படுக்கை விரித்து பன்னீர் தெளித்து பூப்பரப்பி கட்டிலில் உட்கார்ந்து பாடும இடம் என்ன அழகு. ஆவலையும் உணர்ச்சியையும முகத்தில் காட்டிவிடுகிருள் சாந்து. நமக்கும் அந்தக்காட்சி மனதைவிட்டு அகலவில்லை.

சக்ரதாரி சாந்து பெண்மையின் பெருந்தமைக்கும் அடக்கத்துக்கும ஒரு எடுத்துக்காட்டு.

சொல்லிக்கொண்டே போகலாம எவ்வளவோ இருக்கிறது. இன்னும் புதுப்புது முறையான காதலைச்சித்தரிப்பதில் ஈடுபட்டிருக்கும் தமிழ்ப்படக் காதல் இதை எல்லாம் கண்டா பயப்படப்போகிறது.

✷

ஹிந்தி சந்திரலேகா

ஹிந்தி சந்திரலேகா வட நாடெங்கும் திரையிடப்பட்டு விட்டது. கல்கத்தாவில் மூன்று தியேட்டர்களில் வெளியிடப் பட்டதாம். ஏராளமான ஜனங்கள் கண்டுகளித்து மகிழ்ந்து செல்கிறார்களாம். மேற்கு வங்காள கவர்னர் கைலாஸ் நாத் காட்ஜு படத்தை ஆரம்பித்து வைத்து 'சந்திரலேகா ஒரு மகத்தானபடம். இந்தியாவில் தயாரித்த சிறந்த படம்' என்று புகழ்ந்து தயாரிப்பாளர்-டைரக்டர் வாசனையும் பாராட்டிப் பேசினராம். யு பி. கவர்னர் திருமதி சரோஜினி நாயுடுவின் செல்வப் புதல்வி மிஸ். பத்மஜா நாயுடுவும் படக்காட்சிக்கு பிரசன்னமாகி இருந்தாராம்.

படமுடிவில் காட்ஜுவிடம் அன்றைய சாயந்திர வசூலான ரூபாய் 5051-ம் பொது நன்மைக்கு அன்பளிப்பாகத் தரப் பட்டது.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக காலம் உழைக்கும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

GURU TIGER PILLS
குரு டைகர் மாத்திரை
புலிக்கு முன் பூனையா!

காலராவுக்கு கைகண்ட நிச்சய நிவாரணி!
14 அணா

குரு களிம்பு
Guru Ointment.
பத்து படை சகல சர்மரோகங்களுக்கும் ஏற்ற நிவாரணி
விலை அணா 14.

டாக்டர். ஏ. மதுரம் ஸன்ஸ்
குருமருந்து சாலை. திருச்சிராப்பள்ளி.

சலவைக்கு சிறந்த சோப்
J. 101
பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்
வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன
ஒவ்வொரு வீட்டிலும் தினசரி உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.
J. 101-பார் சோப்புகள்
வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.
ஜோதி சோப் ஒர்க்ஸ், கரூர்.
J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

பாஞ்சாலி சபதம்

ரா. பட்டு

அன்று சாயங்காலமிருந்தே பாஞ்சாலி ஒரு விதமாகத்தானிருந்தாள். அவள் முகத்தில் கோபம் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. "வரட்டும். வாயிற்படிக்கு அப்பாலேயே இரு என்று கூறிவிடுகிறேன். அவ்வளவு திமிரா. அவருக்கு அடேயப்பா, எவ்வளவு நல்ல மனுஷன் மாதிரி நடித்திருக்கிறார் என்னிடம். அந்த உறவுதான் இரவு பத்துமணிக்கு மேல் வீட்டுக்கு வரச்சொல்லுதோ உம் வரட்டும இன்னிக்கு ஒரு கை பார்த்துடறேன்" என்று சபதம் செய்து இரைந்து கொண்டிருந்தாள்.

பாஞ்சாலியின் கணவன் கந்தப்பன் பஞ்சாயத்து போர்டு ஆபீஸ் பில் கலெக்டர் முப்பத்தைந்து ரூபாய் சம்பளம். காலையில் ஏழுமணிக்கு ஆபீசுக்குப் போனால் இரவு எட்டு மணிக்குத்தான் வீட்டிற்கு வருவான். ஆனால் சென்ற சில நாட்களாக அவன் வருவதற்கு பத்து மணியாயிற்று அன்று அவன் மத்தியானம் சாப்பிட்டுவிட்டுப்போன பிறகு அரட்டையடிப்பதற்காக அடுத்த வீட்டு அலமேலு வந்திருந்தாள், இருவரும் பேசிக்கொண்டிருந்த போது தான் அந்த சபதத்துக்குக் காரணமான சம்பாஷணை ஏற்பட்டது. "இரவு பத்துமணியாகிறது எம் புருஷன் ஊடுவர" என்றாள் பாஞ்சாலி. குட்டிக்கலக மூட்டி கோள் சொல்லித் திரியும் அலமேலு இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா? 'ஒம் புருஷன் பத்து மணிக்கு வர்ர காரணம் என்ன தெரியுமா?' என்றாள் அலமேலு.

"என்னமோ போ அக்கா, நெதம் இப்படித்தான் வாராரு. கேட்டா வேலை இருந்திச்சுங்கறாரு. என்ன வேலையோ அப்படி' ராத்திரி பத்துமணிவரைக்கும்" என்றாள் பாஞ்சாலி.

"போடி பைத்தியக்காரி. இத்தனை நாளில்லாமே இப்பமட்டும் என்ன அப்படி வேலை வந்திருச்சு. அப்பிடி இருந்தாலும் நெதமா இப்படி இருக்கும்? அது விஷயம் வேறேடி" என்று ஆரம்பித்தாள் தன் சரக்கை அலமேலு.

"என்னக்கா என்ன விசயம்? ஒனக்குத்தெரியுமா?" என்று துடித்தாள் பாஞ்சாலி.

"என்னமோ எனக்கென்னம்மா தெரியும். நீதான் ஒம்புருஷன் என்னமோ ரொம்ப நல்ல மனுஷன்; வேறே பொம்பளைக்களை கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாரு; எங்கிட்டே அதுக்கு எவ்வளவு பிரியம். அப்பிடி....இப்பிடி...ன்னியே இப்ப தெரிஞ்சுதா வண்டவாளம்" என தன் வார்த்தைக்கு மெருகு கொடுத்தாள் அலமேலு. "எதாச்சும் அப்படி தப்பா நடக்கறாக்கா? இருக்காதே" என்றாள் பாஞ்சாலி.

"இபபடி நெனச்சி நெனச்சித்தான் நீ குட்டிச்சுவராப்போறது. ஆமாம், நீயும்தான் ஒரு மாசமா சொல்றேன்னியே. எங்கே ஒரு சீலையாச்சும் வாங்கித்தந்தாரா?" என்று ஒரு போடு போட்டாள்

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமன்றோ! "ஆமாக்கா! நானும்தான்-சொல்லிக்கிட்டு வர்ரேன். கொஞ்சம் பொறு பொறுண்ணு சொல்லிக்கிட்டு வர்ராரு. அவரு மொகத்தைப் பார்த்தா கண்டிச்சு ஒண்ணும் கேக்க முடியல்லேக்கா. என்னுன்னுதான் சொல்லேன்" என்று ஆவலுடன் கெஞ்சினாள் அவள்.

அலமேலு பாஞ்சாலியின் காதைக்கடித்து "அடுத்த தெரு அமராவதியில்லெ அவளோடெ பேசிக்கிட்டு போனதெ நான் ரெண்டு நாள் கண்டேன்" என்றாள்.

"என்ன? என்ன? அந்த தாசி அமராவதியோடயா? அதான் ஆளு இப்படி ஒரு மாதிரியாயிருக்கிறாரா?" என்று ஆச்சரியப்பட்டாள் பாஞ்சாலி.

"நான் சொன்ன நீ நம்புவையா? என்னமோ உளர்ராண்ணு நெனச்சிக்குவே. என்னமோம்மா நீங்க ஒத்துமையாயிருக்கணுமுண்ணுதான் நான் வேண்டிக்கிறேன்" என்று திரியைத் தூண்டிவிட்டு விட்டு தன் வீட்டிற்குச் சென்று விட்டாள்.

மேல் கண்ட சம்பாஷணை காரணமாகத்தான் பாஞ்சாலி அன்று அவ்வளவு ஆக்ரோஷத்துடன் இருந்தாள்.

பத்துமணிக்கு கந்தப்பன் வந்தான். அவன் வரவை எதிர்பார்த்து வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் பாஞ்சாலி. அவன் வந்ததும் வராததுமாக "இந்தா நில்லு. இவ்வளவு நேரம் எங்கெ பொயிட்டு வந்தே. சொல்லிப்புட்டுத்தான் உள்ளெ போவனும் அதென்ன கையிலெ பொட்டணம்?" என்று வழி மறித்தாள் பாஞ்சாலி

கந்தப்பன் ஆச்சரியத்தால் திகைத்துப்போனான். ஒரு நாளும் இப்படி பேசியறியாத பாஞ்சாலி இன்று இப்படி பேசினால்...?

"என்ன விசயம் பாஞ்சாலி?" என்று மெதுவாகக் கேட்டான் கந்தப்பன்.

'செய்யறதையும் செஞ்சுட்டு என்ன விசயமுணு கேக்கறே. ஒன் வண்டவாளந்தான் அக்கம் பக்கமெல்லாம் சிரிக்குதே" என்றாள்

கோபமென்பதே தெரியாத கந்தப்பனுக்குக்கூட கோபம் வரத்தான் செய்தது பாஞ்சாலியின் பேச்சு.

"இந்தா உள்ளெ வா. வாசப்படியிலெ என்ன?" என்றான் கோபத்தை அடக்கிக்கொண்டு.

"எனக்கு ஒன்னும் தெரியாதுண்ணு நெனச்சே" என்று ராஜபாளையம் மாதிரி உறுமினாள்.

கந்தப்பன் அவள் வார்த்தையையோ அவளையோ லக்ஷியம் செய்யவில்லை. நேராக அவளைத்தாண்டி உள்ளே சென்றான்.

"என்ன அது கையிலே பொட்டணம்" என்று அதட்டினாள் பாஞ்சாலி. "என்ன பாஞ்சாலி நீ ரொம்ப அவசரக்காரியாயிருக்கே அந்தப்பொட்டலத்தை உள்ளேவந்து பிரிச்சுக்காட்டணுமின்னு நான் ஓடியாந்தா அபசகுனம் மாதிரி வாசற்படியிலேயே வழி மறிக்கிறே" என்று கூறிக்கொண்டே பொட்டணத்தை அவிழ்த்தான் கந்தப்பன்.

அதற்குள் அழகான ஒரு பச்சைப்புடவையும், நீல ரவிக்கையும் இருந்தது.

அதைக்கண்டதும் அவள் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "இது எது!" என்று கேட்டுக் கொண்டே அதைப் பிரித்துப்பார்த்தாள்.

"நான் தினம் பத்து மணிக்கு என் வர்ரேன்னு இதைக் கேட்டா சொல்லும். எட்டு மணிக்கு மேலே ரெண்டுமணி நேரம் ஸ்பெஸல் டூட்டி பார்க்கறேன். அதுக்குத் தனியா சம்பளம். அதுலெ தான் இதை வாங்கினேன்" என்றான் கந்தப்பன்.

அவள் திடுக்கிட்டாள். அலமேலு சொன்னது என்ன! இவர் சொல்றது என்ன? "இருக்கட்டும். நாளைக்கு அலமேலு வரட்டும், ஒரு கை பார்த்துக்கறேன்" என்று மனதுக்குள் கூறிக்கொண்டாள்.

பழைய சபதம்போய் பாஞ்சாலி புது சபதம் மேற்கொண்டாள்.

அமிர்தாஞ்சன்
சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

ரேகை சாஸ்திரம்

"சிவதாஸன்"

பெருவிரலும் நகங்களும்

சென்றவாரக் கட்டுரையில் கைகளின் அமைப்பின் விசேடங்களைப் பார்த்தோம். இதில் மற்ற விதங்களை ரேகைகளைப் பற்றி எழுதும்போது சொல்லுகிறேன். ஒருவரின் உடலுக்கு சிரசு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கையில் பெருவிரல். பெருவிரல் மூன்று பாகங்கள் கொண்டது. நகம் இருக்கும் முதல் பாகம் (அங்குலாஸ்தி) இரண்டாம் அங்குலாஸ்தி, மூன்றும் அங்குலாஸ்தியான சுக்ரமேடு. இவைகளில் முதல் இரண்டும், மன அமைப்பு உறுதியானதா என்பது பற்றியும், இரண்டாவது ஒருவர் எடுத்த காரியத்தை செய்யும் விதம், தர்க்கம் செய்யும் குணம் இவைகளையும் காட்டுகிறது. இரண்டு அங்குலாஸ்திகளும் ஒரே நீளத்துடன் அமையவேண்டும். இது புத்தி கூர்மையையும், உயர்ந்த பதவிகளுக்கு போவதையும் காட்டுகிறது. பெருவிரல் கையிலிருந்து எவ்வளவு தள்ளி அமைந்திருக்கிறதோ அவ்வளவு சுதந்திரத் தன்மையை குறிக்கிறது. மிகவும் தள்ளி தனிமையாக இருக்குமானல், எவ்வித சட்டங்களுக்கும் கீழ்படியாமல், எவருக்கும் பயமில்லாமல் இருப்பதோடு, கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் சிலருக்கு முதல் அங்குலாஸ்தி பின் பக்கமாக வளைவதை காணலாம். இவர்கள் மிகவும் செலவாளிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பார்கள். வளையாமல் இருந்தால், ஆழ்ந்த சிந்தனையையும், செட்டாகஇருக்கும் தன்மையை விளக்குறது.

பெருவிரல் முதல் பாகம், குட்டையாக, குண்டாக, உருண்டையாக இருந்தால் முன்யோசனை என்பது அநேகமாக இல்லை என்று சொல்லலாம். இவர்களின் இருதயம் மிகவும் பலம் இல்லாமல் இருக்கும். இரண்டாம் அங்குலாஸ்தி ஒடுக்கமாக இருப்பது மிகவும் தந்திரசாலித்தனம், தர்க்க சாஸ்திரத்தில் நிபுணத்வம், என்பது அறிக. இருதய, புத்தி ரேகைகள் நன்கு அமைந்திருந்தால் உயர்ந்த பதவிகளை வகிப்பார்கள். முதல் அங்குலாஸ்தி பலம் இல்லாமல், மெல்லியதாக இருந்தால, இவர்களிடம் மன உறுதி கிடையாது. பெருவிரலிலிருந்து முக்கியமான நோய்களையும் காணலாம். பெருவிரல் உள்ளங் கையில் வாத நோய் வரும்பொழுது பதுங்கிக் கொள்வதைப் பார்க்கலாம். இருதய ரேகையில் அடையாளங்களும் இருந்து, பெருவிரல் அடிக்கடி உள்ளங்கையில் மடங்கிக்கொள்ளுமானல் இவர்கள் மிகுந்த முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். சீன தேசத்தில் பெருவிரலிலிருந்து வாழ்க்கையை நிதானித்து விடுகிறார்கள். நன்கு அமைந்த பெருவிரல் நான்கு பக்கங்களிலும் சுழலக் கூடியதாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக நகங்களின் அமைப்பு தேக ஆரோக்கியத்தைப்பற்றி எச்சரிப்பது நகங்கள். நன்கு அமைந்த, ரத்த ஓட்டமுள்ளவர்களின் நகங்கள் கொஞ்சம் சிவப்பாக இருக்கும். அதிகம் சிவப்பாக இருந்தால் ரத்த ஓட்டம் அதிகம் என்பது. மிகவும் ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும்—மஞ்சள் நிறமாகவோ, வெளுப்பாகவோ இருந்தால் ரத்தம் உடம்பில் மிகவும் குறைவு என்பதை எச்சரிக்கிறது. நகங்களை சாதாரணமாக நான்கு விதங்களாக பிரிக்கலாம். அவை நீண்ட நகம், நீளத்தை விட அகலம் அதிகமாக இருக்கும் குறுகிய நகம், மிகவும் குறுகிய நகம், சிப்பியைப்போல் முக்கோணமான நகம். நீளத்தை விட அகலம் அதிகமாக இருப்பது தர்க்கம் செய்யும் சுபாவத்தையும், சண்டையிடும் தன்மையையும் காட்டுகிறது. நீண்ட நகங்கள், சங்கீத பிரியத்தையும், குளிர்ந்த பார்வையையும்குறிக்கிறது நீண்ட நகங்கள்,மார்புக்குமேல்இருக்கும் உருப்புகளில் வியாதிகளையும், குறுகிய நகங்கள் ரத்தம் இல்லாததையும் குறிக்கிறது நகங்கள் மெல்லியதாகவும், சதையில் உள் அடங்கியும், பிறை வட்டம் எதுவும் இல்லாமல் சிப்பியைப்போல் முக்கோணமாக காணப்பட்டால் மிகவும் கெடுதல். இதில் நகங்களும் நீல நிறமாக காணப்பட்டால் உடனே தகுந்தபடி தேக ஆரோக்கியத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இது நரம்பு சம்பந்தமான வியாதியை மிகவும் தெளிவாக காட்டுகிறது. இதில் ஒரு முக்கியமான குறிப்பு என்னவென்றல், நகங்களைப் பார்த்ததும் அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது. இருதய, புக்தி, ஆரோக்கிய ரேகைகளையும் கிரகங்களின் அமைப்பையும் நன்கு ஆராய்ந்த பிறகே பலன்கள் சொல்லவேண்டும்.



கிரகங்களின் அமைப்பு

மனிதர்கள் கிரகங்களினல் தான் ஆளப்படுகிறார்கள் ஒரு கிரகத்தின் செல்வாக்கே அந்த ரேகையாக பிரகாசிக்கிறது. ஏழு கிரகங்களான, குரு, சனி, சூரியன் புதன், செவ்வாய், சந்திரன், சுக்ரன் ஆகியவர்கள் கையில் அமைந்திருக்கிறார்கள். இவர்களின் இடத்தை படத்தில் காண்க. செவ்வாய் கிரகத்திற்கு மூன்று இடங்கள் இருப்பதை காண்க. சந்திர மேட்டுக்கும் மேல், நடு, கடைசி ஆகிய மூன்று பாகம். ஒரு கிரகம் அமைந்திருக்கிறதா என்பதை அறிய, பூதக் கண்ணடியைக் கொண்டு மெல்லிய ரேகைகள் முக்கோண சந்தியாக அமைந்திருக்கிறதா என்று காண்க. கிரகங்கள் உச்சம் என்பது, இந்த முக்கோணம் அதன் குறிப்பிட்ட இடத்திலும், கொஞ்சம் சதைப்பிடிப்போடு இருப்பதை பார்க்கலாம். கிரகங்கள் சற்றுத் தள்ளியும், முக்கோண சந்தியானது பக்கவாட்டில் சாய்ந்திருப்பதையும் காணலாம். இவைகளின் விசேடங்களும், வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் அடுத்தவாரக் கட்டுரையில் காண்க.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனுதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்த் தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

பாத்ருடுவின்
பாலசஞ்சீவினி (Regd.)
(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனல் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கிழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

4-வது வாரம்

சென்னையில் மூன்று தியேட்டர்களிலும்

- மற்றும் முக்கிய நகரங்களிலும் -

லக்ஷக்கணக்கான மக்கள் கண்டு ஆனந்திக்கின்றனர்

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

T. R. மகாலிங்கம்

அஞ்சலிதேவி நடித்தது

இனிய கானம்

இன்ப நடனங்கள்

- தெவிட்டாத -

கதைப்போக்கு

இடைவிடா நகைப்பூட்டும்

- ஹாஸ்யம் -

டைரக்ஷன்:
T.R.சுந்தரம்
B.A., B.Sc.(LEEDS)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் சேலம் & மதுரை.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).